**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 27TH MARCH, 1981 No. 13

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1981-3-31
PERIODICALS DIVISION
LIBRARY



*Subscription*

Inland Rs. 35/- per year. Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**
'Morning Star', Vaddukoddai.


## Christian Arts and Communication Service Madras

Some 30 oriental artistes from the CACS, Madras delighted the Jaffna public with a three - hour performance, " proclaiming Christ through Song and Dance " on Saturday (14-3-81) at Veerasinghem Hall, Jaffna.

The first part of the programme consisted of duets, solos and quartets to the accompaniment of some 15 instruments. This was followed by a Bharatha Natyam Dance by four girls of all India professional standard.

The Jaffna Christian community owes a large debt of gratitude to Rev. Suviseshamuttu, the Director of the CACS, Madras and his troupe for the demonstrations they have given to the Jaffna public on how oriental music and dance could be harnessed with great effect to our effort in our evangelistic work, particularly in the rural areas.

The bond of brotherhood and fellowship which they have established between Tamil speaking Churches across the Palk Strait shall always remain a living memory.

**Programme at Kilinochchi**

On the evening of the 15th of March 1981, the Christian Arts and Communications Service Institute of Madras had a full programme at Kilinochchi. This programme was sponsored by the C. S. I. Church, Kilinochchi with the co-operation of the Roman Catholic Church, Kilinochchi and was held at the Kilinochchi Town Hall. The Rev. S. Jeyanesan, Presbyter, Church of Christ the King, presided at this meeting, and Mr. V. Anandasangary, M. P. Kilinochchi was the chief guest.

Mr. Anandasangari said that this attempt to use indigenous, cultural art forms for religious purpose is highly commendable. He mentioned that the Christians have contributed much to enrich the Tamil culture and the traditions of the Tamil community through their writings and arts. He said that it was a joy and inspiration to be present at this function, which was also the first to be had in Kilinochchi. A vast gathering was present at this Festival. The Rev. Father Michael, O. M. I., Parish Priest, proposed the Vote of Thanks.

## The J. I. C. C. F.

The Annual General Meeting of the Jaffna Inter Collegiate Christian Fellowship was held at Chundikuli G i r l s' College on 19-3-1981 The Names of the new Office Bearers appear on on Page 4.

*Peradeniya Convocation (19 3-81).*

## Conferment of Doctorate (Posthumous) on Prof. R. H. Paul

In his Citation, presenting on behalf of the Senate, Robert Hoisington Paul for the Posthumous Conferment of the *Degree of Doctor of Science (Honoris Causa)*, Professor W. P. Jeyasekara, Dean of the Faculty of Engineering referring to the brilliant undergraduate career of Prof. Paul and his pioneering work in the University noted the following accomplishments :—

Prof. Paul obtained a First Class in the Mechanical Sciences Tripos at Cambridge, being the *first Ceylonese* to achieve this distinction.

He pioneered in setting up the Electrical Engineering Department at the Ceylon Technical College and became its *first* Director.

When the University of Ceylon established its Faculty of Engineering in 1950, he was appointed to the Chair of the Electrical Engineering.

A Specialist in Electrical Energy and Power, he saw to it that the present state of the Electrical Engineering Laboratories in Peradeniya was made adequate for the increasing student in-take

His major contribution to the country was the training of a large corps of Electrical Engineers over a period of four decades.

He is regarded in Professional circles as the *father of Electrical Engineering education in this country.*

*Editor's Note*

Prof. Robert H. Paul was the youngest son of Rev. Issac Paul and Mrs. Paul of Uduvil. Rev. Issac Paul was a Pastor in the American Ceylon Mission. He and his wife Elizabeth Paul served at Uduvil for ten years.

## Serampore Senate honours C. S. I. Moderator

The Most Rev. Solomon Doraiswamy was conferred the degree of Doctor of Divinity *Honoris Causa* by the Senate of the Serampore University at the recent Convocation held in Serampore. Bishop Doraiswamy who had been for some years in the Ministry of the C. S. I. both as Presbyter and as Principal of a Boys' High School was appointed Bishop of the Trichy—Tanjore Diocese in 1964. He was for several years Deputy Moderator of the Church of South India and was elected Moderator in January, 1980. Bishop Doraiswamy has an excellent record of dynamic and creative leadership within the Church of South India. In his own Diocese he has been responsible for the considerable growth of the Church and for the vast development programmes. The new Bishop Heber College of Trichy will always be a monument to his far sighted leadership.

*Letter to the Editor*

## The Duties of a Clergyman

M. Furlong is an address to a conference of clergy in the diocese of Wakefield (England) in 1966) points out " In an age which is not particularly interested in faith, it is difficult for people to understand what the clergyman is up to, and so they are apt to suggest that he isn't up to anything in particular. " This statement may not be applicable to our situation. However, it is good for us to re-think on the role of the clergy in the changing modern World. Sri Lanka is not yet an industrially oriented society as the societies in the west. Villages are still soil - oriented thus the people are still backward using old methods of farming. In such situations a Minister still plays the traditional role though his education may be of urban nature. This traditional role includes conducting the Sunday morning worship and preaching, visiting the sick and praying for them, cottage prayer meetings and parish visiting and performing the usual rituals of wedding, funeral and house warming ceremonies and prayer meetings for special occasions such as birthday parties, memorial services so on and so forth. A minister is also an administrator. He keeps the records in tact, supervises the other administrative functions, chairs the committee meetings and he is also an administer in the spiritual sense for he administers the Holy Sacraments.

In this changing World is it enough for the minister to play only the traditional role that is expected of him by the villagers or does he have to innovate new ideas and try to do something exciting and aventurous to renew and change the Church as well as the village where he serves ?

In most industrial countries and where there are bonded labour ministers are called upon to play a liberating role. Moses of the Exodus is cited as the supreme example of the Christian calling for liberating people. Thus we now have a " Theology of Liberation " which is very well developed and acted upon in the Latin American countries. Whether this theology is useful for us in our own situation is for the readers to think about.

Another important function of the clergy is not just meeting the traditional expectations of the parish but also to " equip the Saints " Saints not by the virtue of their deeds or sinlessness but by the grace of God only. In the sight of God there is no difference between clergy and laity. In the Christian belief, we acknowledge the Priesthood of all believers. Thus every Christian is a minister However, the clergy has been set

*(Continued on last page)*

## Uduvil Girls' College

**" In the steps of the Master"**

A Special Lenten Service at 6-00 p. m. Friday 3rd April, 1981.

*All are cordially invited*

**Principal & Staff**

## IN MEMORIAM

IN EVER LOVING MEMORY OF

**Kandiah Elizabeth Nallammah**

Died: 29th March, 1970

*Yes I remember,*
*Yes I care*
*Your name is whispered*
*in our prayers.*
*A smile, a tear,*
*a thought sincere*
*How often I wish that*
*you were here.*

**Arulpooranam**

*Obituary*

## Mr. A. A. Ponnuthurai

The death occured on 17-3-81 of Mr. A. A. Ponnuthurai at the residence of his daughter, Mrs. Spencer Panchadcharam at Vaddukoddai.

Mr. Ponnuthurai was a teacher at St. Henry's College, Ilavalai for over 35 years.

The funeral took place at Pandaiterruppu and his remains were interred at the Pandaiterruppu Church burial grounds.

## India's Population doubles in 34 years

The provisional report of India's Census taken on the 1st of March shows a population of 683,810,051 which is an increase of 24.75 per cent of the population as at 1971. The population of India 34 years ago in 1947 was half the above figure. We give below some interesting figures from the latest Census report,

| | |
|---|---|
| Calcutta is the most populated city with | 9,165,650 |
| Greater Bombay comes next with | 8,202,759 |
| Delhi | 5,227,730 |
| Madras | 4,276,635 |

India's population shows that there are only 935 females per 1,000 males. This adverse proportion in females is found only in India, Pakistan and Bangladesh. Kerala is the only state where women outnumber men. 1,034 women per 1,000 men.

Literacy according to the latest Census report is still low at 36.17 per cent compared to 24 per cent in 1961.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "

மலர் 141 ] 27 — 3 — 1981 [ இதழ் 13


## வேலை வாய்ப்பு அவசியம்

யந்திரப் புரட்சிக் காலத்தில் முதலாளித்துவ வகுப்பினோர் செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு மனிதருக்குப் பதிலாய் யந்திரங்களைப் பயன்படுத்தியதால் மனிதருக்குரிய மகிமையைப் பாழாக்கினார்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது. செவ்வையாயும் மலிவாயும் பொருட்களைச் செய்வதற்கு மனிதரை விட யந்திரங்களே உகந்தவை யென அவர்கள் கொண்டிருக்கலாம். தற்கால ரீதியிற் பேசப்போனால் — அரசாங்கத்தின் மின்சக்தி உற்பத்திப் பிரிவின் யந்திரங்கள் வேலை நிறுத்தம் செய்தாலொழிய — யந்திரங்களைப் பொறுத்த அளவில் சட்டப்படி வேலையுமில்லை; மெதுவாய்ச் செயல்படும் சவாலுமில்லை; சலுகைகள் கோரும் வேலை நிறுத்தங்களுமில்லை; எனவே யந்திரங்களை உபயோகிப்பதிற் பலாபலன் உண்டு எனலாம்.

எனினும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுங்கால், வேலை தேடி வருவோர்க்கு ஏற்றபடி வாய்ப்பளிக்க நாம் மறுக்குங்கால், மனிதனின் சுய கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கிறோம். நாட்டை முன்னேறச் செய்வதில் தனக்குப் பங்குமில்லைப் பாகமுமில்லை யென்ற சிந்தனையைத் தூண்டி விடுவதோடு தன் நலன் குறித்துச் சமுதாயத்திற்கு எவ்வித கரிசனையுமில்லை யென்ற எண்ணத்தையும் அவன் மனதில் உருவாக்கி விடுகிறோம். காலகதியில் அவன் கொள்ளக்கூடிய விரோத மனப்பான்மைக்கு இது வித்திடுவதாகும்.

கூடுதல் கூடுதலாக யந்திரங்களை உபயோகிப்பதினால் காலப் போக்கில் மனிதர் எவருக்குமே எவ்வித வேலை வாய்ப்பும் கிட்டாமற் போகுமென்பதற்கில்லை. மனிதரை முற்றும் முழுவதுமாய் யந்திரங்கள் ஆட்கொண்டுவிடும் எனச் சொல்லவும் நாம் துணியவில்லை. எனினும் யந்திரங்களை உபயோகிப்பதற்கு இடமுமுண்டு; ஓர் அளவும் உண்டு. தற்கால உலகிற்கு அவை தேவையே. எப்படியாயினும், நம்மையே அவை ஆட்கொள்ளாவிடினும், நமது நாட்டின் சுதந்திரத்தை, பண்பாட்டை, பொருளாதாரத்தை, பொது வளத்தை அவை ஆட்கொள்ளாமற் பாதுகாப்பதவசியம்.

ஆதலாற்றான் வருங்காலத்தில் யந்திரங்களின் உபயோகத்தைக் குறைத்து மனிதருக்கு வேலை வாய்ப்பை அதிகரிப்பது தமது திட்டமென நமது பிரதமர் சமீபத்திற் கூறியதை வரவேற்கிறோம். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் மக்களுக்கு உரிய பங்கை அது கொடுப்பது மல்லாமல் அநாவசியமான அளவிற்கு நம் பணத்தை விரயம் செய்து யந்திரங்களைப் பெறுவதிலும் பராமரிப்பதிலும் நமது நாட்டை நட்டப்படுத்தாதிருக்க அது உதவும்.

படித்தும் வேலையற்றுத் திரியும் வாலிபரின் எண்ணிக்கை நாளாந்தம் வளர்வதை நாம் காண்கிறோம். நில அளவையாளர் போலத் "தெரு அளவையாளர்" என வீதி தோறும் நடமாடித் திரிபவர்கள் இவர்களே. செய்வதற்குப் பயன் தரும் எதுவும் இல்லாமல், அநாவசியக் காரியங்களில் ஈடுபட்டுக் குற்றச் செயல்களைப் பயில்வதும் புரிவதும் இவர்களென்றே கூற வேண்டும். இந் நிலைக்குப் பொறுப்பு யார்?

இவைகளைக் கூறும்போது இரண்டு முக்கிய காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறோம். ஒன்று, வேலை வாய்ப்பளிக்கும் பொறுப்புடையோர் யாவரும் மனதிற் கொண்டிருக்க வேண்டியது வேலை கொடுப்பதிற் தேவையும் தகைமையுமே கணிக்கப்பட வேண்டும். "வோட்டு" பெறும் நோக்கமோ இனசன பந்துக்களை ஆதரிக்கும் சிந்தனையோ இருப்பது தகாது. இப்பேர்ப்பட்ட தகாத செயல்களினாற்றான் நமது போக்குவரத்துச் சேவைச் சபையும் வேறு பல தாபனங்களும் தாங்கொணாத பாரத்தைத் தலைமேற் சுமந்து கொண்டு தவிக்கின்றன.

நமது இரண்டாம் குறிப்பு வேலை பெறும் மக்களைச் சார்ந்ததாகும். வேலை பெரிதாயினும், சிறிதாயினும் அது தம்மேல் விழுந்த கடமையெனவும், அதைச் செவ்வையாய் நடத்துவது தமக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவாதமெனவும் அவர்கள் மறந்து போகாதிருக்க வேண்டும். தாம் செய்பவற்றிற்கும் செய்யத் தவறுபவற்றிற்கும் பொறுப்பாளிகள், கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் என அவர்கள் உணர்ந்து கொள்வதவசியம். இல்லையேல் நம்பிக்கைத் துரோகிகள் எனவே நாடும் சமுதாயமும் அவர்களைக் கணிக்க வேண்டியதாகும்.

---

செய்திகள்

### வர்ணத் தொலைக் காட்சி

அடுத்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கை முழுவதிலும், தென்னிந்தியாவிலும் உள்ளவர்கள் இலங்கைத் தொலைக் காட்சிச் சேவை நிறுவனத்தினால் பரப்பப்படும் வர்ணக் காட்சிகளை கண்டுகளிக்கக் கூடியதாயிருக்கும். வட இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் சேவைப்படும்படி கொக்குவிலிலும் வவுனியாவிலும் பரப்பி நிலையங்கள் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் வர்ணத் தொலைக் காட்சிப் பரப்பிகள் இல்லாததால் கொக்குவிலில் நிறுவப்படும் இந் நிலையத்திலிருந்து பரப்பப்படும் நிகழ்ச்சிகளைத் தென்னிந்திய நேயர்கள் மிக விருப்புடன் பெற்றுக்கொள்ளுவார்கள் என நம்பப்படுகிறது. அந்த ஆண்டின் சுதந்திர தினத்தன்று இந்தச் சேவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

### இறக்குமதிகளின் பெறுமதி

இந்த ஆண்டு முடியும் போது இலங்கை தனது இறக்குமதிக் கணக்கால் 5,000 கோடி ரூபாவைச் செலவிட்டதாயிருக்குமென கணக்கிடப்படுகிறது. இது சென்ற ஆண்டின் இறக்குமதிக் கணக்கிலும் பார்க்கச் சுமார் 1600 கோடி ரூபா கூடிய தொகையாகும்.

இந்தச் செலவு அதிகரிப்புக்குப் பிரதான காரணம் எரி பொருட்களின் விலையேற்றம் எனக் கூறப்படுகிறது. இவைகளின் விலை கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. 1979இல் இலங்கை இறக்குமதி செய்த எரி பொருட்களின் விலை 3187 கோடி ரூபாவாகும். 1980இல் இது 7308 கோடியாய் உயர்ந்தது.

அரிசியும் மா, கோதுமை முதலியனவும் செலவு மிகுந்த பிற இறக்குமதிப் பொருட்களாகும். 1980இல் இறக்குமதியான அரிசியின் பெறுமதி 75·6 கோடி ரூபா. மாவும் கோதுமை போன்ற தானிய வகைகளும் சென்ற ஆண்டில் 234 கோடி ரூபாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டன.

இதற்குப் பதிலாக இலங்கை இந்த ஆண்டில் 2500 கோடி ரூபாவுக்குப் பொருள் ஏற்றுமதி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஆண்டில் இது 1729·4 கோடியானது.

### ஆந்திரப் பிரதேச அரசாங்கத்தில் கிறிஸ்தவர்களுக்கு இடம்

தென் இந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்தின் அமைச்சர் அவையில் மூன்று கிறிஸ்தவர்கள் உளர். திரு. G. வேதாந்த ராவ் (லூதரன் சபை) — கிராமப் புற அபிவிருத்தி அமைச்சர்; டக்டர் Y. S. இராஜ சேகர ரெட்டி (தெ. இ. திருச்சபை) — சுகாதார அமைச்சர்; திரு. D. ஞானப் பிரகாசம் (தெ. இ. திருச்சபை) — வனப் பரிபாலன அமைச்சர். சென்ற கிறிஸ்மஸ் காலத்தில் ஆந்திரப் பிரதேசக் கிறிஸ்தவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்திய கிறிஸ்மஸ் விழாவில் பிரதம அதிதியாய்க் கலந்து கொண்ட ஆந்திரப் பிரதேசப் பிரதம மந்திரி திரு. T. அஞ்சையா அவர்கள், கிறிஸ்தவக் கல்வி நிலையங்களின் உயர்ந்த தரத்தையும் சிறந்த பணியையும் பாராட்டிப் பேசியபின், ஆந்திர தேசத்தில் இலட்சக் கணக்கான கிறிஸ்தவர்கள் இருப்பதினால் (மேற்கூறிய மூவரையும் விட) இன்னும் கிறிஸ்தவர்களுக்கு உரிய பதவிகளை அரசாங்கத்தில் தாம் கொடுக்கப்போவதாகக் கூறினார்கள். அதோடு புதுவருடத் தினத்தையும் பெரிய வெள்ளியையும் கூடப் பகிரங்க விடுதலை நாட்களாகத் தாம் பிரகடனப்படுத்துவதாகத் தெரிவித்தார்கள்.

### சமயக் கல்வி — புதிய உத்தியோகத்தர்

தெ. இ. திருச்சபை, யாழ். ஆதீனத்தின் சமயக் கல்விக் குழு இந்த ஆண்டிற்கான உத்தியோகத்தரைத் தெரிவு செய்துள்ளது:-

குழுத் தலைவர் :-
செல்வி C. V. செல்லையா

உப குழுக்கள் —

வளர்ந்தோர் மத்தியிலான பணி :-

கனம் N. W. G. சுகுணராஜா (கூட்டுபவர்), கனம் D. R. அம்பலவாணர், திரு. S. ஜெயநேசன், திரு. M. தம்பித்துரை, திரு. பிறின்ஸ் இரத்தினம்.

வாலிபர் மத்தியிலான பணி :-

கனம் T. S. பிரேமராஜா (கூட்டுபவர்), செல்வி C. V. செல்லையா, திரு. G. இராசநாயகம், திரு. நேசக்குமார் கதிர்காமர், திருமதி R. தங்கராஜா.

பிள்ளைகள் மத்தியிலான பணி :-

கனம் A. ஜெயக்குமாரன் (கூட்டுபவர்), கனம் J. J. இரத்தினராஜா, செல்வி S. P. குலசிங்கம், திருமதி T. A. தம்பியப்பா, திரு. S. இரத்தினவேல்.

சமயக் கல்வி அதிபர் கனம் S. N. சுகுணானந்தன் அவர்கள் குழுவின் செயலாளராகக் கடமையாற்றுவார்கள்.

மரணம்

### திரு. S. N. சின்னத்தம்பி

யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் கீழ் பல ஆண்டுகள் ஊழியனாயிருந்து இளைப்பாறிய திரு. S. N. சின்னத்தம்பி அவர்கள் இந்த மாதம் 8ஆம் திகதியன்று காலமானார்கள். இவர்கள் மெதடிஸ்த சபையைச் சேர்ந்த கனம் S. தேவநேசன், திருமதி அற்புதம் அரசரத்தினம் ஆகியோரின் அருமைத் தந்தையாவர். ஆதீனத்தின் முதல் ஆளைக்கோட்டைச் சபை ஊழியனாகச் சேர்ந்த இவர்கள் பிற்பாடு புங்குடுதீவு, உசன் சபைகளிலும் கடமையாற்றியுள்ளார்கள்.

மெய் நல்லடக்கம் சம்பந்தமான வீட்டு ஆராதனை திங்கட்கிழமை 9ஆம் திகதியன்று சங்கத்தானையிலுள்ள அவர்களின் மகள் திருமதி அரசரத்தினம் அவர்கள் இல்லத்தில் அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்களினால் சாவகச்சேரிச் சபைக் குரு கனம் J. J. இரத்தினராஜா அவர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது. பாராட்டுரைகள் இளைப்பாறிய அத்தியட்சர் மகாகனம் S. குலேந்திரன், கனம் கிங்ஸ்லி முத்தையா, திரு. K. A. செல்லையா அவர்களினால் அருளப்பட்டன. மெய் நல்லடக்கம் சாவகச்சேரிச் சபைச் சேமக்காலையில் கனம் J. J. இரத்தினராஜா, கனம் M. இராஜகுலேந்திரன் ஆகியோரின் உதவியுடன் மகாகனம் அத்தியட்சர் அவர்களினால் நடத்தப்பட்டது.

### வாசகர்களுக்கு ஆசிரியர்

உங்கள் மனதிலெழும் கேள்விகளுக்கு விடையளிக்கத் "தாரகை" முன்வருகிறது. ஆத்மீக சம்பந்தமான காரியங்களென்றால் என்ன, வாழ்க்கையிலெழும் வேறு பிரச்சனைகளென்றால் என்ன, இவையெதிலும் அறிவு பெறவோ ஐயுறவு தீரவோ உங்கள் கேள்விகளுக்கு விடை வேண்டுமாயின கேளுங்கள்; கொடுக்கப்படும். வெவ்வேறு விடயங்களில் விடையளிக்கத் தகுதி வாய்ந்த ஒரு குழுவினரை நியமிக்கிறோம், அக் குழுவினரில் ஒருவர் விடை தருவார். கேள்விகளைப் பிரசுரிக்கும் போது உங்கள் பெயர் வெளியிடப்படுவதை நீங்கள் விரும்பாது போனால் புனை பெயரில் எழுதுங்கள். எனினும் எழுதும் கடிதத்தில் உங்கள் பெயர் விலாசமும் கையொப்பமும் இருக்க வேண்டியதவசியம். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பத்திராசிரியர்,
"உதயதாரகை,"
குருமனை,
உடுவில், சுன்னாகம்.

# இறையாட்சிக்குள் இடம் பெற்ற தலைவன்

— வ இராஜ்குமார் —

கிறிஸ்து பெருமானின் ஜீவிய காலத்தில் பலர் அவரைத் தேடிச் சென்று சந்தித்தனர்; அவரும் பலரைச் சந்தித்தார். சகேயு என்னும் ஆயக்காரர் தலைவன் ஒருவனை கிறிஸ்து பெருமான் சந்தித்த சம்பவத்தை இங்கு பார்ப்போம். பஸ்கா பண்டிகையின் காலம். யூதருடைய தினக்குறிப்பு ஏட்டின் படி (கலண்டர்) நிசான் மாதம் 14-ம் நாள் பஸ்கா பண்டிகை கொண்டாடப்படும். எனவே அண்டை ஊர்களிலிருந்தும், அதிக தூரத்திலிருந்தும் மக்கள் எருசலேமுக்கு வந்துகொண்டிருந்தனர். கிறிஸ்து பெருமானும் அவரது சீடரும் புறப்பட்டு வந்தனர். இவர்கள் கலிலேயா சமாரியா வழியாக எருசலேமுக்கு வந்து கொண்டிருந்தனர் (லூக். 17 : 11). இயேசு வருகிறாரா என்று தேடிக் கொண்டு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். ஆம் அவர் வருகிறார் எனக் கேள்வியுற்ற மக்கள் ஏராளமாக வந்துகொண்டிருந்தனர், கூட்டம் பெரிதாகவிருந்தது. இப்படிப்பட்ட சமயத்தில் முப்பது லட்சம் மக்கள் கூடுவார்களாம்.

பரிசேயரும் சதுசேயரும் கிறிஸ்து பெருமான் இப்போது எருசலேமுக்கு வரமாட்டார், சனகரீம் சங்கத்தையும் உரோம ஆட்சியையும் தாக்கிப் பேசமாட்டார் என்று உறுதியாக நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால் அவரோ எருசலை நகர் நோக்கி விரைந்து கொண்டிருந்தார். அங்கு தனக்கு நடக்க இருப்பவற்றைக் குறித்துச் சீடருடன் உரையாடிக்கொண்டே வந்தனர். (லூக். 18 : 31—34). மாற்கு நற்செய்தி நூலாசிரியர் இந்தப் பின்னணியில் எழுதுகின்றபோது சீடர்கள் திகைப்போடும் அச்சத்தோடும் போனார்கள் என்று எழுதுகிறார். ஆனால் கிறிஸ்து பெருமானோ எவ்வித திகைப்பும் அச்சமுமின்றி தன் மீட்பின் பணியை நிறைவேற்ற எருசலேமை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்.

எரிகோவைச் சமீபித்தபோது வழியோரத்தில் ஒரு குருடனைச் சந்திக்கின்றார்கள் (லூக் 18:35-43). அவன் கிறிஸ்து பெருமானை தாவீதின் குமாரனே என்று அழைக்கிறான். இவரே மேசியா; இதோ அரசராக வருகிறார் என்பதை உணர்ந்து கொண்டான் போலும். கிறிஸ்து பெருமானும் அவனுக்கு பார்வை அளித்தார். அவனும் மக்கள் வெள்ளத்தில் சேர்ந்து கொண்டான். எரிகோவினுள் வந்து சேர்ந்தார்கள். அங்கேயே கிறிஸ்து பெருமான் சகேயுவைச் சந்திக்கின்றார் (லூக் 19:1—10). நாம் பார்த்த இந்த சூழ்நிலையிலேயே, பின்னணியிலேயே அவர் சகேயுவைச் சந்திக்கின்றார். உரோம ஆட்சியாளர்களை எதிர்த்து தாம் தலைவர் மேசியா அரசன் என்பதை உறுதிப்படுத்தவே போகிறார் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மனதில், ஒன்றையுமே அறியாதவர்களாக ஆனால் உள்ளத்தில் ஏதோ பெரிய அச்சம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். சீடர். கிறிஸ்து பெருமானோ தனக்கு எருசலேயில் நடக்க இருக்கின்றனவற்றைக் குறித்து கவலையோடு ஆனால் திடமனதோடும், துணிவோடும், தனது மீட்பின் பணியை சிலுவையின் பாடுகளுக்கூடாக நிறைவேற்றி முடிக்கப் போகிறேன், இறையரசானது தாபிக்கப்படப்போகிறது என்ற உணர்வோடு, அந்த வெற்றியின் பெருமிதத்தோடு காணப்படுகிறார்.

எரிகோ ஈச்ச மரங்களின் நகரம். பிற்காலத்தில் சந்திரனின் ஊர் அல்லது நறுமணத்தின் ஊர் எனப் பொருள்பட அழைக்கப்பட்டது. எரிகோவுக்கும் எருசலேமிற்கும் இடைப்பட்ட தூரம் 6 மணித்தியால பிரயாண தூரம் எனக் கூறப்படுகிறது. எரிகோவின் ஆயத்துறையில் முக்கிய ஆயுநராக அங்கு வரிவசூலிக்கின்ற ஆயுநர்களுக்குத் தலைவனாகப் பணிபுரிந்து வருகிறவனே சகேயு. சகேயு என்றால் நீதி அல்லது தூய்மை என்று பொருள்படும். ஒரு செல்வந்தன் அநீதியினால் சம்பாதித்த செல்வமாக இருக்கலாம். ஒரு குள்ளன்; உடல்நிலையில் மட்டுமல்ல உள்ளத்தின் நிலையிலும், இறை — மனித உறவிலும், மனித—மனித உறவிலும் குள்ளனாகவே காணப்படுகிறான். இயேசு வருகிறார் என்பதைக் கேள்விப்பட்டான் அவரைப் பார்க்க ஆசித்தான். சிறுபிள்ளைபோல் காட்டத்தி மரத்தில் ஏறி அவரைப் பார்க்க விளைந்தான். வரும் வழியில் சகேயு கிறிஸ்து பெருமானைக் கண்டு கொள்கிறான் அவரும் சகேயுவைச் சந்திக்கின்றார். அவனுடைய உள்ளக் கிடக்கையைப் நன்கு புரிந்துகொண்ட அவர், அவனைப் பெயர் சொல்லி அழைத்து அவர் வீட்டிற்கு அவனோடு விருந்துண்ணப் போகிறார்.

## சகேயு கிறிஸ்து பெருமானின் காட்சியைக் கண்டான்

கிறிஸ்து பெருமானைக் காண வந்தவன் தன் பாவ உணர்வுடன் வரவில்லை. அவர் இன்னார், எப்படிப்பட்டவர் என்பதைப் பார்க்கவே வந்தான். சகேயுவிடம் காணப்பட்ட பாவம் என்ன? யோவான்ஸ்நானகனிடம் ஆயக்காரர் வந்து "போதகரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டதற்கு அவர் கொடுத்த விடை "உங்களுக்குக் குறித்திருக்கிறதற்கு அதிகமாக ஒன்றும் வாங்காதிருங்கள்" என்பதே (லூக் 3:12—13). இது அவர்களுக்குரிய இயிட்சியம். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கூடாக இலக்காகிய கிறிஸ்து பெருமானை கண்டடைந்து இறையரசுக்குள் பிரவேசிக்கவேண்டும். சகேயு இந்த இலட்சியத்தை நிறைவேற்றத் தவறிவிடுகிறான். தனக்குரிய சரியான பாதையில் செல்லத் தவறி விடுகிறான். இலக்கைத் தவற விட்டுவிட்டான். பாவியாகக் காணப்படுகிறான்.

நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள இலக்கு கிறிஸ்து பெருமான் (பிலி. 3 ; 14). இந்த இலக்கை நோக்கியதாகவே எமது வாழ்க்கையும் வாழ்க்கையின் இலட்சியங்கள் யாவும் அமைந்திருக்க வேண்டும். இந்த இலக்கை நாம் தவற விட்டுவிடின் பாவிகளாகவே காணப்படுவோம். நாம் இந்த இலக்கை நோக்கி ஓடாதபடி நம்மைத் தடை செய்கின்ற எந்தச் செயலும் பாவங்களாகக் காணப்பட்டு நம்மை பாவிகளாக்கியும் விடுகின்றன. கிறிஸ்து பெருமானைக் காண வந்த சகேயு பாவ உணர்வுடன் வரவில்லை. நாமோ இறைவனுடைய சமுகத்திற்குப் போகின்றபோது உணர்வோடு எம் பாவ உணர்வோடு போகிறோமா?

சகேயு கிறிஸ்து பெருமானைக் காணவந்தான். ஆனால் மக்கள் அவனுக்குத் தடையாகவே இருந்தார்கள். இன்று கிறிஸ்தவர்களாகிய நாமும் பல வேளைகளில் பலர் கிறிஸ்து பெருமானிடம் வருவதற்கு தடைக் கற்களாக இருக்கிறோம். நம்மவரிடையே காணப்படும் வேறுபாடுகள், சபைப் பிரிவினைகள், சாதி வேற்றுமைகள், நமது பண்பாட்டிற்கும் இந்த மண்ணுக்குமே உரியதல்லாத சில பழக்கவழக்கங்கள், ஆராதனை முறைகள், கலைகலாச்சாரம் என்பன தடைக்கற்களாகக் காணப்படுகின்றன, தடைக்கற்கள் யாவும் படிக்கட்டாக மாறவேண்டும். இந்தப் படிக்கட்டுகள் வழியாகவே ஏறி கிறிஸ்து பெருமானை அறியாதவர்கள் அவரைக் கண்டுகொள்ள வேண்டும். சகேயு தனக்கிருந்த தடைகளை மேற்கொண்டவனாக கிறிஸ்து பெருமானைக் கண்டு கொண்டான்.

(தொடரும்)

## செய்திகளின் சாரம்

### சனத் தொகை — கடைசி நேர மாற்றம்

இலங்கையின் பன்னிரண்டாவது குடிமதிப்பு இம்மாதம் 17ஆம் திகதி முடிவடைந்தது. அன்றைய தினம் ஆயிரம் பிள்ளைகள் இலங்கை பூராவும் பிறந்தனர் இவர்களும் சனத் தொகையிற் சேர்க்கப்பட்டனர் பத்தாம் திகதி முடிவடைந்த ஆயத்தக் கணக்கெடுப்பின்போது இருந்தவர்களில் சுமார் 400 பேர் இறுதிக் கணக்கெடுப்பின் முன் காலமாயினர். அவர்களின் பெயர் நீக்கப்பட வேண்டியதாயிற்று. மேலோட்டமாகப் பார்க்கும்போது இப்போதுள்ள இலங்கைச் சனத் தொகை சுமார் 145 இலட்சமாகும்,

* * *

### புதுமுறை மரதன் ஓட்டம்

ஆறு தென் ஆபிரிக்க ஓட்டக்காரர் புதுமுறையான ஒரு மரதன் ஓட்டத்தைச் சமீபத்தில் ஓடினார்கள் விசோதோ மலைச் சாரலில் மலைகளையும் தாண்டி ஓட வேண்டிய $205\frac{1}{2}$ மைல் தூரமான ஓட்டத்தை 45 மணித்தியாலங்களில் ஓடி முடித்தார்கள். இது ஒரு வெற்றிச் சாதனை எனக் கூறப்படுகிறது.

* *

### மாவட்ட அபிவிருத்திச் சபைகள்

நாட்டின் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல்களை வரும் மே மாதத்தில் நடத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள், பாராளுமன்றத்தினர் ஆகியவருடன் சேர்ந்து இத் தேர்தல்களுக்கான ஆயத்தங்களைச் செய்வார்கள். தேர்தல் திணைக்களம் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறது.

* * *

### கடிதங்கள் — விரைவுச் சேவை

கொழும்பு பெரிய தபாற் கந்தோரில் காலை 10-30 மணிக்கு முன் வந்து சேரும் கடிதங்களை காலி, மாத்தறை, கண்டி முதலிய இடங்களுக்கு அதே நாளிற் சேர்ப்பிக்கும் ஓர் ஒழுங்கை வரும் மே மாதம் தொடக்கமாக அஞ்சற் திணைக்களம் செய்யவிருக்கிறது. இந்தச் சேவைக்குப் பிரத்தியேகக் கட்டணம் ஒன்று அறவிடப்படும், இதில் சுமாரான ஒரு பகுதி இக் கடிதங்களைக் கொண்டு செல்லவிருக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சேவைக்குக் கொடுக்கப்படும்.

### குட்டிக் கொள்ளைக்காரன்

அமெரிக்காவில் மன்ஹற்றன் பகுதியில் ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் ஒரு கைத் துப்பாக்கியைக் காட்டி, ஒரு வங்கி உத்தியோகத்தரை விரட்டி, பணம் பறித்துக் கொண்டோடினான். மன்ஹற்றனிலுள்ள ஒரு குடும்ப நியாய விசாரணை ஸ்தலத்தில் இக் குற்றச் சாட்டு விளங்கப்படுகிறது.

* * *

### கொள்ளை இலாபம் !

நாளாந்தம் கொழும்பு நகரில் மட்டும் சுமார் 28,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்படுகின்றன. என ஒரு செய்தி அறிக்கை கூறுகின்றது. இதில் நாலில் ஒரு பங்கு மீட்கப்படுகின்றது. மிகுதியானவை கண்டுபிடிக்கப்படுவதில்லை. சென்ற பெப்ரவரி மாதம் திருடப்பட்ட பொருட்களில் ரூபா 834,205.85 சதம் பெறுமதியானவை கண்டுபிடிக்கப்படாமற் போயின.

* * *

### மலிவான எரி பொருள்

மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கு உபயோகிக்கப்படக்கூடிய எரி பொருள் ஒன்று அவுஸ்திரேலியாவில் அதிகமாக வளரும் இரண்டு வகையான காட்டுப் பூடுகளினின்று பெற்றுக் கொள்ளப்படலாம். இதற்கான ஆய்வுப் பரீட்சைகள் ஒரு வருடத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பூடுகளிற் காணப்படும் சாற்றிலிருந்து மிகக் குறைந்த செலவில் சுத்திகரிக்கப்படாத ஓர் எண்ணெயைப் பெறலாமெனக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

* * *

### வீடு வாசலற்றோர் திண்டாட்டம்

நியூயோர்க் நகரில் நிரந்தரமான வீடுவாசல் அற்றவராய்ச் சுமார் 36,000 பேர் பஸ் தரிப்பு நிலையங்கள், புகையிரத ஸ்தானங்கள், கடைப் பின் புறங்கள் முதலிய இடங்களிற் காலங்கழிக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. அரசாங்கத்தினால் நடத்தப்படும் பொது உறைவிடங்களில் 3200 பேருக்கே இடமிருக்கிறதாம். இப்பேர்ப்பட்டவர்களைத் தாபரிக்க நியூயோர்க் நகரம் ஆண்டொன்றுக்கு 120 லட்சம் டொலர் செலவு செய்கிறது.

* * *

### வெள்ள விபத்து

22-3-81இல் காரைநகர் தோப்புக்காட்டிலிருந்து புறப்பட்ட வள்ளம் ஒன்று ஊர்காவற்றுறைக் கடலில் புரண்டதினால் 14 பேர் மாண்டனர், ஏழு பேர் காப்பாற்றப்பட்டனர். இந்த வள்ளம் பத்துப் பேரை மாத்திரம் கொண்டுசெல்வதற்கு அனுமதிக்கப்பட்ட ஒன்று. குறிக்கப்பட்ட தொகையினோர்க்குக் கூடியவர்களைக் கொண்டு செல்வதினால் திரும்பத் திரும்ப இக் கடல்களில் விபத்துக்கள் ஏற்பட்டிருந்தும் எவரும் பாடம் படித்ததாயில்லை.

*EDITORIAL*

## Desecration !

An enviable anatomy of life in Sri Lanka has alwas been the sanctity of the ' home '. An attachment to their home ( by which we mean both the dwelling place as well as the native village or town,) is a very happy feature of the psychological profile of Sri Lankan youth.

Floods of tender memories sweep over them as they think of their ' home '. A young man who left home last week for his post graduate studies abroad confided to us that nothing gave him greater joy during the last few weeks as the fact of his *visa* getting delayed by a couple of months.

Rupert Brooke's lyric, *The Old Vicarage of Grandchester* reminds us of similar tender feelings which the English Poet had, while he was still in War service away from 'home' (during World War I).

........ Oh, yet
Stands the Church clock at ten to three ?
And is there honey still for tea ?

[ We are happy that some of our Church clocks on our belfry towers in Jaffna still keep to tradition].

In this context, nothing has disturbed us so much in recent times as the news of a project launched by the Ceylon Tourist Board of *Rooms in Private Houses* for *tourists*, with the ' bait ' offered for the landlord or landlady, of loans from the Bank of Ceylon, for restructuring their residences to suit tourist traffic.

According to the Project, the Ceylon Hotels Corporation will ' market ' the rooms for the tourists as soon as they are ready according to specifications and the rent payable will be determined by the size and swagger of the apartments.

There will undoubtedly be *grades* of " reconditioned Private Residences " and consequently grades of landlords and landladies who will all be under the supervision and surveillance of the Tourist Board and Hotel Corporations to ensure that the tourist gets a fair deal.

A new kind of bureaucracy is emerging in the country — the rapacious hotelier whose tentacles now cover the new class of reconditioned private residences, authorised for tourist intake [The projected horde this year is estimated to be in the region of 375,000].

What all this means in terms of Ceylon currency, to the Sri Lankan owners of " re-conditioned houses ", it is easy to understand and grasp.

But what it connotes, in human terms in Sri Lanka and in the quality of life in this country (particularly of families residing in the city and its suburbs) should be a matter of grave concern.

According to a Swiss Psychologist, the Swiss suffer from periodic bouts of *Xenophoebia*. They are not at home in their country. Aliens make up eighteen per cent of the population.

Will it be that in Sri Lanka at the pace in which we are ' modernising ', that people will soon in Chesterton's words "become homesick in their homes and strangers under the sun ". [An estimated 4615 persons are reported missing from their homes in 1980].

Or, will the ' modernisation ' end up in an explosive increase of ' per capita power ' with people getting into one another's way.

Whatever the situation, here is a challenge for the Christian Church in Sri Lanka to see that the sanctity of our homes, at least, is not assailed by the unbridled economic policies of our time, of "private enterprise" taking over from the state a part of its responsibilities.

Not all the members of the family may be in the home but the ' home ' should remain a link that binds them to their culture, their traditions and to all the values that have nourished them in the tender years of their life.

" In a well loved home " says a writer " every window has a different click. "

The ' home ' plays a major role in determining the stabitity of the youth and the depth and solidarity of their values. We cannot fashion our dwellings with any other end in view than that of achieving this objective.

There is much substance today in those words of Winston Churchill — a man whose feelings were always naked to the bone— " *we shape our dwellings and in the end, our dwellings shape us.* "

## Bishop Lakshman Wickremasinghe in World Anglican Theological Commission

The Rt. Rev. Lakshman Wickremasinghe, Bishop of Kurunegalle, has been appointed a member of the International Anglican Theological & Doctrinal Commission by the Archbishop of Canterbury and the Secretary General of the Anglican Consultative Council. The Commission will meet for the first time from the 20th July to the 1st of August to study " Church and Kingdom in creation and redemption" paying special attention to " the diverse and changing cultural contexts in which the Gospel is proclaimed, received and lived. "

### Duties of a Clergyman

*(Continued from first page)*

apart to perform special functions. They are also trained for it. It is the duty of the clergy to share the training with the parish and thus equip the saints. In other words the clergy should help the people themselves to become ministers. The minister serves the Church so that the Church will serve the world.

Finally people in a village very much want the presence of a minister. A clergyman symbolises God to them. Most of the clergy wear a cassock or some other symbol like a clerical collar a cross or whatever it is to distinguish himself from others. Though nowdays ministers are not so keen to distinguish themselves in this manner, people seem to need this distinction. No one can see God, but people want to see Him one way or another. Jesus thus came in the human flesh and revealed God to us. Likewise people expect to see Jesus Christ in the clergy. This is one of the most demanding expectations of the people from the clergy. Clergy or laity we all are human beings and we all have fallen short of the Glory of God, thus sinners. So it is difficult for the clergy to be like Jesus Christ as much as it is difficult for the laity. However, when the clergy wears the clerical vestments he symbolises Jesus Christ for the laity. He becomes a symbol pointing to God. He represents Jesus Christ, as John A. T. Robinsn puts it to the people. Thus the presence of a clergyman becomes the presence of Jesus Christ himself in the form of human flesh. Thus this is one of the most demanding as well as the most limited function of the Clergyman. People need God, people need His presenee, for this Clergyman represents His presence in the midst of his parish at the village, though he himself is as much a sinner as the laity.

I would urge now other clergymen and laymen to give their own reflections if possible how they view the role of the Clergyman in the changing world and I heartily welcome constructive criticisms of this article.

**Nesan Kadirgamar**

### J. I. C. C. F.

President :
Mr. R. E. J. A. Setukavlar
Vice President :
Miss. Y. Jeyaratnam
Secretary :
Mr. S. Jebanesan
Treasurer :
Mr. G. Anketell
Auditor :
Miss. Suganthy Karunanandam
Student President :
Renold Snell
Student Secretary :
Bala Brodie

*HOME CALL*

### Chinnathamby Solomon Samuel

The death of Mr. C. S. Samuel, a former director of Samuel Sons and Company Ltd. took place at the General hospital Colombo on the 10th of February after a brief illness. His funeral took place on the 12th evening.

He and his brothers S. C. Samuel and S. V. Chelliah were the earliest Christian pioneers from Jaffna in Hardware business in Colombo. Under their hardworking and enterprising spirit the firm prospered and branches were opened in Jaffna and Kilinochchi.

Along with his hardworking and enterprising nature Mr. Samuel had a simple, deep and childlike Christian faith. Wherever he lived he served the Church in many ways. In the 40's he bought a property in Mutwal and came to live there with his family. For many years he served faithfully and joyfully as Warden of the Cathedral Church of Christ, Mutwal. A former Bishop of Colombo, the Rt. Rev. Graham Campbell was very fond of him and always referred to him as "our Cathedral Samuel " God blessed him with many good and intelligent children who are doing very well today in many parts of the world as doctors, engineers and professors. He was justly proud of all of them and his Church and religion.

His funeral service at home was conducted by the Rev. Blessing Chelliah assisted by his nephew the Rev. Donald Kanagaratnam, Alfred Chinniah and Gerald de Alwis. The funeral service at the graveside in Kanatte was conducted by the Rt. Rev. Swithin Fernando, Bishop of Colombo assisted by Rev. Donald Kanagaratnam and the Ven. J. J. Gnanapragasam.

### Women's Centre Celebrations

The Forty First Anniversary of the William Mather Memorial Women's Centre, Maruthanamadam came off on Saturday (14-3-81).

Rev. N. W. G. Sugunarajah conducted the Holy Communion Service in the morning and the Tellippalai Church Women's Fellowship conducted the Thanksgiving Service at 10 a. m. Mrs. E. T. Rajaratnam gave the message.

Mrs. K. Nesiah declared opened the SALE which continued through the day. Miss Mabel Thambiah presided at the Public Meeting in the afternoon at which the Chief Speaker, Rev. A. C. Thambirajah of Navajeevanam spoke on the Challenge of running a Christian Orphanage.

Mrs. Nathaniel, the Secretary of the Board and Mrs. E. S. Daniel, the Superintendent of the Centre presented their reports.

The children of the Girls' Home *Arulaham*, provided a musical entertainment. One of them, Kalaichelvi Thirugnanasambanthar proposed a Vote of Thanks which was greatly applauded.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB/100/25/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 27th March, 1981.